02.02.2024



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.137/2017</u>**

**<u>வா.சா. 1–சரோஜா, க/பெ. மாணிக்கம்</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

02. தாவா சொத்து ஆதியில் உங்களுடைய மாமனாரின் தகப்பனார் வெங்கிடுசாமிக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல, ராமசாமிக்கு தான் பாத்தியம். ராமசாமி என்பவருக்கு தான் பாத்தியம் என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் என்ன ஆவணம் என்றால் வரி ரசீது ஆவணங்களாகும். நீங்கள் சொல்வது போல் ராமசாமிக்கு சொத்து பாத்தியப்படவில்லை, வெங்கிடுசாமிக்கு தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வெங்கிடுசாமி இறக்கும் காலத்தில் எந்த ஆவணம் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று சொன்னால் என் மாமனார் சிறுவயதில் இருக்கும் போதே வெங்கிடுசாமி இறந்துவிட்டார்.

03. உங்கள் மாமனார் அழகர்சாமியின் உடன் பிறந்த ராமசாமி மற்றும் ரெங்கராஜ் ஆகியோர்கள் வெங்கிடுசாமி காலமான பிறகு மூவரும் தாவா சொத்துக்களை

பாகப்பத்திரம் 21.06.1981ம் வருடத்தில் பிரித்து ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தின் படி A அட்டவணை சொத்து ராமசாமிக்கும் B அட்டவணை சொத்தை உங்கள் மாமனார் அழகர்சாமியும், ரெங்கராஜ் என்பவரும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பத்திரத்தின்படி அவரவர்கள் பிரிந்த சொத்துக்களை அவரவர்கள் கட்டுப்பட்டு கிரையம் செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

04. ராமசாமிக்கு வடபுறத்தில் கிழமேல் 14 அடியும், தென்வடல் 10 அடியும் வீடு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டிற்கு வடக்கு பார்த்து வாசற்படி உள்ளது என்றால் சரிதான். உங்கள் மாமனாருக்கும், ரெங்கராஜ்-க்கும் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு கிழமேல் பொதுசுவருக்கு தெற்கே ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அழகர்சாமியும், ரெங்கராஜ்ம் ஒதுக்கப்பட்ட வீட்டின் கீழ்புறத்தில் ஒரு வாசற்படியும், மேல்புறத்தில் ஒரு வாசற்படியும் அமைத்து அழகர்சாமியும், ரெங்கராஜ்வும் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் ரெங்கராஜ் அனுபவம் செய்து வரவில்லை. உங்கள் வீட்டில் கீழ்புறத்தில், மேல்புறத்தில் வாசற்படி உள்ளது என்றால் சரிதான். அதை

காண்பிக்கக்கூடிய புகைப்படம் தான் தற்போது உங்களிடம் காண்பிக்கப்படுவது என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

05. ஒதுக்கப்பட்ட வீட்டில் அழகர்சாமியும், ரெங்கராஜ்வும் இருந்து வந்தார்கள் என்று சொன்னால் இல்லை. ராமசாமிக்கு குழந்தை இல்லாததால் அவருக்கு உதவியாக என் கணவர் இருந்து நாங்கள் தான் குடியிருந்து வந்தோம். 1981ம் வருடம் ஏற்பட்ட பாகபிரிவினையின் படி வீட்டின் வடபுறத்தில் ராமசாமியும், அதன் தெற்கே கிழமேலாக பிரித்து கிழக்கே அழகர்சாமியும், மேற்கே ரெங்கராஜ்வும் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, நாங்கள் தான் குடியிருந்து வந்தோம். தென்வடலாக குறுக்கே பொதுசுவர் உள்ளதா என்றால் இல்லை. அழகர்சாமிக்கு பிரிந்த பகுதிக்கும், ரெங்கராஜ்வுக்கு பிரிந்த பகுதிக்கும் இடையே பொதுசுவர் உள்ளது என்றால் சரியல்ல.

06. பெரிய மாமனார் ராமசாமியின் மனைவி பெயர் அம்சவள்ளி. மேற்கண்ட இருவருக்கும் வாரிசுகள் பிறக்கவில்லை. அம்சவள்ளியின் தங்கை மகன் பெயர் ராவணன்(எ)பிச்சை என்றால் ராவணபிச்சை ஆகும், அவரை ராவணன் என்று அழைப்பார்கள். ராமசாமியின் பங்கை தனக்கு தான் உயில் மூலம் பாத்தியம் என்று

ராவணன் பிரச்சனை செய்தாரா என்றால் என் மாமனார் 1985 ம் வருடம் வழக்கு தாக்கல் செய்தார். ராமசாமி–அம்சவள்ளி ஆகியோர்கள் வங்கியில் வைத்துள்ள வைப்பீடு சம்மந்தமாக ராவணபிச்சை தனக்கு தான் பாத்தியம் என்று உங்களிடம் பிரச்சனை செய்தாரா என்றால் இல்லை. ராவணபிச்சை பிரச்சனை செய்ததால் உங்கள் மாமனார் அழகர்சாமி அசல் வழக்கு எண்.71/1985 தாக்கல் செய்தார் என்று சொன்னால் தாக்கல் செய்திருப்பார்.

07. அந்த வழக்குப்படி ராமசாமிக்கு ஒதுக்கிய பங்கு உங்கள் மாமனார் அழகர்சாமிக்கும், ரெங்கராஜ்வுக்கும் என்றும், வைப்பீடு தொகை ராவணபிச்சைக்கும் என்று தீர்ப்பானது என்று சொன்னால் சரிதான். ராமசாமியின் சொத்தை ஏற்கனவே அதற்கு தெற்கே நீங்கள் கிழமேலாக சுவர் வைத்து பிரித்து வசித்து வந்ததால் அவ்வாறே ராமசாமி சொத்தையும் கிழமேலாக பிரிக்க வேண்டும் என்று தீர்ப்பு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ராமசாமிக்கு ஓதுக்கிய இடத்தில் உள்பக்கமாக வழக்கின் தீர்ப்பிற்கு பிறகு கிழமேல் சுவரில் கிழக்கு பக்கம் தெற்குபார்த்து வாசல் வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தீர்ப்பு ஏற்பட்டதால் தான் நீங்கள் தென்வடலாக பிரித்து கொண்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

02.02.2024



நாங்கள் இன்னும் பாகம் பிரித்து கொள்ளவில்லை, அதனால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

08. நீங்கள் ஏற்கனவே பாகம்பிரித்து கொண்டதாக கூறிவிட்டு, தற்போது பொய்யாக பாகம் பிரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் மாணிக்கம் பெயரில் கிரையாவணமோ, செட்டில்மெண்ட் ஆவணமோ உள்ளதா என்றால் இல்லை. வழக்குரையில் மாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டு, பட்டா ஏற்பட்டுள்ளதா சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். மாணிக்கத்திற்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. என் மாமனாரும், மாமனாரின் சகோதரர் ரெங்கராஜ்வும் எந்தவித ஆவணமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

(இருதரப்பு வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

குறிப்பு

பி.வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.